சேலம் மத்திய மாவட்டம் ஓமலூர் சட்டமன்ற தொகுதி பாகமுகவர்கள் B.L.A.2. B.D.A. பயிற்சி கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட பொருளாளர் மு.கார்த்திகேயன், தலைமைச் செயற்குழு சி.ராஜேந்திரன், தொகுதி பொறுப்பாளர்கள் பி.ஏ.ஆர்.இளங்கோவன், இ.ஜி.சுகவனம், ஒன்றிய செயலாளர்கள் ஏ.சி.எம். செல்வகுமரன், ஓ.எம்.ரமேஷ், பாலசுப்பிரமணியன், கே.சி. அறிவழகன், கே.சி.ரவிச்சந்திரன், அய்யப்பன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் சிறப்புக் குழு ஆய்வு கூட்டம் அமைச்சர் முனைவர் கோவி.செழியன், மாவட்ட ஆட்சித் தலைவர் பா.பிரியங்கா பங்கஜம் தலைமையில் சிறுபான்மையினர் ஆணைய குழு உறுப்பினர்கள் திருச்சி கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் முனைவர் த.இனிகோ இருதயராஜ், தமிழ்நாடு வக்ஃப் வாரிய உறுப்பினர் மரு.அ.சுபேர் கான் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில் நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினார்கள். ச.முரசொலி எம்.பி., மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன், மேயர் சண்.இராமநாதன், துணை மேயர் மரு.அஞ்சுகம் பூதி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

பெண்கள், அமைதி, பாதுகாப்புத் திட்டத்தின் மீதான

இந்தியாவின் அர்ப்பணிப்பு அசைக்க முடியாததாக உள்ளது!

ஐ.நா. சபையின் அமைதி நிறுவல் ஆணையக் கூட்டத்தில் பி.வில்சன் எம்.பி. பேச்சு!

நியூயார்க், நவ. 1-

“பெண்கள், அமைதி, பாதுகாப்புத் திட்டத்தின் மீதான இந்தியாவின் அர்ப்பணிப்பு அசைக்க முடியாததாக உள்ளது” என்று இந்திய நாடாளுமன்ற மாநிலங்களவை கழக உறுப்பினர் பி.வில்சன் நியூ யார்க்கில் நடைபெற்ற ஐ.நா. சபையின் அமைதி நிறுவல் ஆணையக் கூட்டத்தில் பேசும்போது கூறினார்.

அமெரிக்காவின் நியூயார்க் நகரில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் நடைபெற்ற பெண்கள், அமைதி மற்றும் பாதுகாப்பு குறித்த அமைதி நிறுவல் ஆணையத்தின் தூதர் மட்டக் கூட்டத்தில் பங்கேற்ற இந்தியாவின் நிலைப்பாட்டு அறிக்கை குறித்து மாநிலங்களவை உறுப்பினர், மூத்த வழக்கறிஞர், பி. வில்சன் பேசியதாவது:

பாதுகாப்பு கவுன்சிலின் தீர்மானம் 1325ன் 25ஆம் ஆண்டு நினைவு நாளை ஒட்டி இன்றைய நிகழ்வை ஒருங்கிணைத்ததற்காக, அமைதி நிறுவல் ஆணையத்தின் தலைமை ஜெர்மனிக்கு இந்தியா தனது பாராட்டுகளை தெரிவிக்கின்றது. பெண்கள் சமத்துவத்திற்காக நமீபியா அமைச்சரும், ஐ.நா. மகளிர் அமைப்பின் நிறைவேற்று இயக்கு நரும், மற்றும் மற்ற உரையாளர்களும் தங்களது ஆழமான கருத்துகளையும், பெண்கள், அமைதி மற்றும் பாதுகாப்பு (WPS) திட்டத்தை மேலும் வலுப்படுத்த உதவும் மதிப்புமிக்க பங்களிப்பு களையும் வழங்கியதற்காக நன்றி தெரிவிக்கிறோம்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் அமைதிப்படை நடவடிக்கைகளுக்கான முன்னணி பங்களிப்பாளர்களில் ஒன்றாக இருக்கும் இந்தியா, அமைதியை உருவாக்குவதற்கும் நிலை நிறுத்துவதற்கும் பெண்களின் முழுமையான மற்றும் சமமான பங்கேற்பு இன்றியமையாதது என்பதை வலியுறுத்துகிறது. அமைதிக்காப்பு மற்றும் அமைதிநிறுவல் மீதான எங்கள் அர்ப்பணிப்பு, தேசிய உரிமை மற்றும் பெண்கள், அமைதி மற்றும் பாதுகாப்பு (WPS) நோக்கங்களின் கொள்கைகளுடன் இணை ந்துள்ளது.

அமைதிக்காப்பு அத்தியாவசிய மானவை!

இந்தியாவின் அமைதிக்காப்பு பாரம்பரியத்தை தனித்துவமாக ஆக்கும் அம்சம் எங்கள் பங்களிப்பின் அளவில் மட்டும் இல்லை, நிலைத்த

அமைதிக்கான இன்றியமையாத செயற்பாட்டாளர்களாக பெண்களை முன்கூட்டியே அடையாளம் கண்டது என்பதிலும் இருக்கிறது.

பாதுகாப்பு கவுன்சிலின் தீர்மானம் 1325 பிறக்கும்முன்பே, 1960களில் இந்திய பெண் மருத்துவ அதிகாரிகள் காங்கோவில் பணியாற்றினர். இது, ஐ.நா. அமைதிப்படை நடவடிக்கைகளில் பெண்கள் பங்கேற்ற முதன்மையான நிகழ்வுகளில் ஒன்றாகவும் பதிவாகிறது. இது ஒரு குறியீட்டு நடவடிக்கை மட்டுமல்ல; மாறாக, பெண்களின் நேர்மையான பங்களிப்பு மற்றும் பார்வை, திறன்கள், மற்றும் அவர்களின் பங்கு பயனுள்ள அமைதிக்காப்பு மற்றும் அமைதி நிறுவலிற்கு அத்தியாவசியமானவை என்பதைக் கண்கூடாக அங்கீகரிக்கிறது.

2007 ஆம் ஆண்டு, இந்தியா ஐ.நா.வின் முதல் முழு பெண்கள் கொண்ட காவல் படை பிரிவை (Formed Police Unit) லைபீரியாவிற்கு அனுப்பியது. இந்த முன்னோடியான முயற்சி, அந்நாட்டின் உள்ளூர் பெண்களை தங்கள் தேசிய காவல் மற்றும் பாதுகாப்பு சேவைகளில் சேர ஊக்குவித்தது. இன்று, இந்திய பெண்கள் அமைதிப்படை வீராங்கனைகள் காங்கோ ஜனநாயகக் குடியரசு, அப்யேய் மற்றும் தென் சூடான் ஆகிய இடங்களில் சிறப்பாக பணியாற்றி வருகின்றனர். அவர்கள் சமூகங்களுடன்நம்பிக்கையைஉருவாக்குவதிலும், பாலின அடிப்படை யிலான வன்முறையைத் தடுக்கவும், பொதுமக்கள் பாதுகாப்பை வலுப்படுத்த வும் முக்கிய பங்கு வகித்து வருகின்ற னர்.

இவ்வாறான பணியமர்வுகளின் மூலம், அமைதிக்காப்பு மற்றும் அமைதிநிறுவலில் பெண்கள் வழங்கும் தாக்கத்தை இந்தியா வெளிப்படுத்தியுள்ளது. பெண்கள், சமூகங்களில் நம்பிக்கையை உருவாக்கி, குறிப்பாக பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு நம்பிக்கையை அளிக்கின்றனர். மிக முக்கியமாக, அவர்கள் பாலின அடிப்படையிலான வன்முறையை எதிர்கொள்ளவும், அமைதிக்கான வழிமுறைகள் சமூகத்தின் அனைத்து பிரிவுகளின் தேவைகள் மற்றும் பார்வைகளை பிரதிபலிக்கவும் உதவுகின்றனர். அத்துடன், மோதல் நிலப்பரப்புகளில் உள்ள பெண்களுக்கு, அவர்களும் தலைவர்களாகவும், அமைதி நிறுவர்களாகவும் ஆக முடியும் என்பதற்கான உதாரணமாக திகழ்கின்றனர்.

சமூக ஒற்றுமை ஒன்றிணைந்த ஆட்சி!

தேசிய அளவில், பெண்கள் முன்னேற்றத்திலிருந்து பெண்கள் தலைமையிலான முன்னேற்றம் என்ற இந்தியாவின் பயணம், எங்கள் சமூகத்தின் ஒவ்வொரு துறையையும் மாற்றியுள்ளது. இன்று, அடிப்படை மட்டத்தில் 14 இலட்சத்திற்கும் மேற்பட்ட பெண்கள் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாக பணியாற்றுகின்றனர். மேலும், 23க்கும் மேற்பட்ட இந்திய மாநிலங்களும் ஒன்றிய பிரதேசங்களும், உள்ளூராட்சி மன்றங்களில் 50 சதவீத இடங்களை பெண்களுக்கு ஒதுக்கி உள்ளன. இது, சமூக ஒற்றுமை மற்றும் ஒன்றிணைந்த ஆட்சி ஒன்றை ஒன்று பூர்த்தி செய்யும் அம்சங்கள் என்பதை வலியுறுத்துகிறது.

இந்தியா, பெண்களுக்கான திறன் மேம்பாட்டு முயற்சிகளில், குறிப்பாக உலக தெற்கு நாடுகளிலிருந்து வரும் அமைதிப்படைப் பணியாளர்களுக்காக, தொடர்ந்து முதலீடு செய்து வருகிறது. புது டெல்லியில் உள்ள ஐக்கிய நாடுகள் அமைதிக்காப்பு மையம் (Centre for United Nations Peacekeeping), இன்று பாலின உணர்வுமிக்க பயிற்சிகளுக்கான உலகத் தரம் வாய்ந்த மையமாக உருவெடுத்துள்ளது.

அது, பெண்கள் அமைதிப்படை வீராங்கனைகளுக்காக முக்கிய பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்தி, அவர்களுக்கு இயக்கத்திட்டமிடல், பொதுமக்கள் பாதுகாப்பு, பாலியல் சுரண்டல் மற்றும் வன்முறைத் தடுப்பு, பாலின உணர்வு மிக்க தலைமைத்துவம் போன்ற துறைகளில் அத்தியாவசிய பயிற்சிகளை வழங்குகிறது. இவ்வாண்டின் தொடக்கத்தில், இந்தியா உலக தெற்கு நாடுகளிலிருந்து பெண்கள் அமைதிப்படை வீராங்கனைகளுக்காக நடத்தப்பட்ட முதல் வகையான சர்வதேச மாநாட்டை நடத்தி வரலாறு படைத்தது.

எதிர்காலத்தை நோக்கி நாம் முன்னேறிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில், பெண்கள், அமைதி மற்றும் பாதுகாப்பு (WPS) திட்டத்தின் மீதான இந்தியாவின் அர்ப்பணிப்பு அசைக்க முடியாததாக உள்ளது. இந்தியா தனது கூட்டு நாடுகளுடன், குறிப்பாக உலக தெற்கு நாடுகளுலுள்ளவர்களுடன், தனது அறிவு, பயிற்சி, மற்றும் தொழில்நுட்பத்தை பகிர்ந்து கொண்டு, பொதுவான சவால்களுக்கு கூட்டாக தீர்வுகளை உருவாக்குவதில் தயாராக உள்ளது.

இவ்வாறு பி.வில்சன் எம்.பி. அவர்கள் பேசினார்.

2026 – சட்டமன்றத் தேர்தலுக்குப் பின்

தமிழ்நாட்டில் பா.ஜ.க. காணாமல் போய்விடும்!

அமைச்சர் ரகுபதி பேட்டி!

புதுக்கோட்டை. நவ. 1-

புதுக்கோட்டை புதிய பேருந்து நிலையம் அருகே உள்ள கலைஞர் பூங்கா முன்பு அமைக்கப்பட்டுள்ள மகளிர் சுய உதவி குழுவினரால் தயாரிக்கப்படும் கைவினைப் பொருட்களை விற்பனை செய்வதற்காக அமைக்கப்பட்டுள்ள மதி அங்காடியை தமிழ்நாடு இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ் ரகுபதி, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே. செல்லப்பாண்டியன் ஆகியோர் திறந்து வைத்தனர். மேலும் இதில் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா, மாநகராட்சி மேயர் திலகவதி செந்தில் உள்ளிட்டரும் கலந்து கொண்டனர்.

அப்போது செய்தியாளர்களை சந்தித்த தமிழ்நாடு இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கூறுகையில்:

எஸ்.ஐ.ஆர். குறித்து ஏற்கனவே தி.மு.க. அதன் தோழமைக் கட்சிகளின் கூட்டத்தை கூட்டி அதில் தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாட்டில் அனைத்து கட்சி கூட்டத்தை கூட்ட நவம்பர் இரண்டாம் தேதி முடிவு செய்துள்ளார். அதில் அனைத்து கட்சிகளின் கருத்துகளும் பதிவு செய்யப்படும். அதன் பிறகு தொடர் நடவடிக்கை எடுக்கப்படும்.

சிறுபான்மையினர் மக்களை ஒட்டு மொத்தமாக வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்குவதற்கும், பட்டியல் சமூகத்தைச் சேர்ந்தவர்களை நீக்குவதற்கும் தேர்தல் ஆணையத்தின் மூலமாக ஒன்றிய அரசு மேற்கொண்டு இருக்கிறது. இதை எந்த காலத்திலும் திமுக கேட்கவில்லை. ஏற்கவில்லை. பீகாரிலும் இதுபோன்றுதான் நடந்துள்ளது. இந்தியாவில் தொடர்ந்து அகதிகளாக வந்து இங்கேயே இருக்கக் கூடிய நம்முடைய இலங்கை தமிழர்கள் போன்றவர்கள் பிற நாடுகளில் இருந்து வந்தவர்கள் எல்லாம் குடியுரிமை பெற முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இலங்கை தமிழர்களுக்கு நாம் இங்கு வீட்டு வசதி ரேஷன் பொருட்கள் அனைத்தும் கொடுத்து வருகிறோம். ஆனால் அவர்களுக்கு இங்கு குடியுரிமை கிடையாது. 11 ஆண்டுகள் 12 ஆண்டுகள் இருந்து அவருடைய மூதாதையர்கள் இந்தியாவில் இருந்த ஆதாரத்தை நிரூபித்தால் கூட அவர்களை வாக்காளர் பட்டியலில் சேர்ப்பது கிடையாது.

ஒரு வாக்காளரை இந்திய குடிமகனா? இல்லையா என்பதை தீர்மானிக்க வேண்டியது இந்தியன் சிட்டிசன் ஆக்ட் 1955. ஆனால் இந்திய குடிமகனா இல்லையா என்பதை முடிவு செய்யும் அதிகாரம் தேர்தல் ஆணையத்திற்கு வழங்கப்பட்டிருக்கிறது. இது ஒட்டுமொத்தமாக நமது அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு எதிரானது.

ஆதாரை ஏற்றுக்கொள்வது என்பது வேறு. அதே நேரத்தில் ஒருவரை இந்திய

குடிமகனா இல்லையா என்று தீர்மானிக்கக்கூடிய சக்தியை இவர்களுக்கு யார் கொடுப்பது. ஆதார் வைத்திருப்பவர்கள் இந்திய குடிமகன் தானே. அப்புறம் ஏன் தேர்தல் ஆணையம் தான் இந்தியாவின் குடிமகனா இல்லையா என்பதை தீர்மானிக்கும் என்று சொல்வது ஏன்? இது நிச்சயம் தவறு செய்யக் கூடிய முன்னோட்டமாக அமைந்திருக்கிறது.

இதுகுறித்து நீதிமன்றத்தில் இருக்கக் கூடிய வழக்குகளில் நாங்களும் சேர்ந்துள்ளோம் நூற்றுக்கும் மேற்பட்ட இயக்கங்கள் தங்களை இணைத்துக் கொண்டுள்ளனர்.

தமிழ்நாடு அரசு ஊழியர்கள் நேர்மையானவர்கள் அவர்களுக்கு சில கட்டளைகள் வரும்பொழுது அந்த கட்டளைகளை பின்பற்றக்கூடிய சூழ்நிலை வருகிறது. எப்படிப்பட்ட ஆணைகளை தேர்தல் ஆணையம் சொல்லும் என்பது தெரியாது. தேர்தல் ஆணையம் மற்றும் தவறான விஷயங்களை சொல்லிவிட்டால் அதிலிருந்து பாதிக்கப்படுபவர்களுக்கு காப்பாற்ற வேண்டும்.

தமிழ்நாட்டில் வெளி மாநிலங்களில் இருந்து வந்து வேலை பார்க்கக்கூடிய எண்ணிக்கை லட்சத்திலிருந்து கோடி கணக்கில் வந்துள்ளது. பல்வேறு மாநிலங்களில் இருந்து புலம்பெயர்ந்து இங்கு வேலை பார்த்துவிட்டு அவர்களது பண்டிகை காலங்களில் போது அவர்களது சொந்த மாநிலங்களுக்கு சென்று விடுகின்றனர்.

ஆனால் இதில் இருக்கக்கூடிய ஆபத்து அவர்களுக்கு இங்கு வாக்காளர்களாக கொடுக்கும் பொழுது தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அரசியல் சூழ்நிலை தெரியாது. அவர்களது மாநிலத்தின் அரசியல் சூழ்நிலையை வைத்துக் கொண்டு வாக்களிப்பார்கள். அதனால் தமிழ்நாட்டை பற்றி தெரியாதவர்களை ஒரே இடத்தில் நிரந்தரமாக இல்லாதவர்களை எல்லாம் தமிழ்நாட்டின் வாக்காளர் பட்டியலில் சேர்க்கக் கூடாது என்பதுதான் எங்களது கருத்து.

தமிழ்நாட்டில் இருந்து புலம்பெயர்ந்து வெளி மாநிலங்களுக்கு செல்பவர்கள் அங்கேயே நிரந்தரமாக தங்கி விடுகின்றனர். ஆனால் பீகாரில் இருந்து வருபவர்கள் கோயம்புத்தூரில் இரண்டு மாதமும் திருப்பூரில் இரண்டு மாதமும் திருச்சி திருநெல்வேலியில் மூன்று மாதமும் வேலை பார்க்கிறார்கள் இப்படி அடிக்கடி இடத்தை மாற்றிக்கொண்டு தற்காலிகமாகத்தான் பணிபுரிகின்றனர். ஆனால் தமிழ்நாட்டில் இருந்து வெளி மாநிலங்களுக்கு செல்பவர்கள் நிரந்தரமாக அங்கே இருக்கின்றனர். அதனால் நிரந்தரவாசிகளாக எடுத்துக் கொள்ள முடியும். ஆனால் வெளிமாநிலத்தில் இருந்து தமிழ்நாட்டிற்கு வருபவர்கள் அப்படி இருப்பதில்லை அவர்களை நிரந்தரவாசிகளாக எடுத்துக் கொள்ள முடியாது நிரந்தரவாசிகளாக இருப்பவர்கள் தான் வாக்களிக்க முடியும்.

2026 தேர்தலுக்குப் பிறகு பாஜக தமிழ்நாட்டில் இருந்து காணாமல் போகுமே தவிர எங்களது தலைவரோ திமுகவோ காணாமல் போவாது. மீண்டும் திமுகவின் 2.0 தொடரும்.

விவசாயிகள் இழப்பீடு ஏற்படும் பொழுது அவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படுகிறது. பொதுமக்கள் யாரும் பாதிக்கப்பட்டதாக சொல்லவில்லை.

நயினார் நாகேந்திரன் அவருக்கு கொடுத்த தலைவர் என்ற பதவியை தக்க வைப்பதற்காக எதை வேண்டுமென்றாலும் பேசி வருகிறார், புதிய கூட்டணிகள் அவர்களிடத்தில் செல்லப் போவதில்லை.

கேரளா பிஎம்சி திட்டத்தில் சேர்த்ததைப் பற்றி எங்களுக்கு கவலை இல்லை. எங்களது கொள்கையைத் தான் நாங்கள் சொல்ல முடியும்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி மங்களூர் கிராமத்தைச் சார்ந்த செந்தில் என்பவர் வயலில் வேலை செய்து கொண்டிருந்த பொழுது விஷ பாம்பு கடித்து மறைவெய்தினார். தகவல் அறிந்ததும் முதலமைச்சர் அவர்கள் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.3 லட்சம் வழங்கிட உத்தரவிட்டதை தொடர்ந்து உயிரிழந்த செந்திலின் குடும்பத்தினருக்கு முதல்வரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.3 லட்சமும் அமைச்சர் சி.வி.கணேசன் தமது சொந்த நிதியிலிருந்து ரூ.2 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.5 இலட்சத்தினை வழங்கினார்.

ஈரோடு மாவட்டம், உயர்கல்வித் துறை சார்பில் அரசினர் பொறியியல் கல்லூரி கலையரங்கத்தில் கலையால் கல்வி செய்வோம் எனும் தலைப்பில் கல்லூரி கலை திருவிழா வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி ஆலோசனையின் படி, மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கந்தசாமி தலைமையில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கி சிறப்புரையாற்றினார். நிகழ்வில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி. சந்திரகுமார், கல்லூரி தாளாளர், தலைமை ஆசிரியர், ஆசிரிய பெருமக்கள், மாணவ, மாணவியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.